புது முறைத்
தமிழ் மணி வாசகம்

இரண்டாம் வகுப்பு



...கோபாலகிருஷ்ணக்கோன்

சென்னை

Pudu Murai

Tamil Mani Vachagam

Class II

[Revised—1948]

Vidwan S. CRUZ ANTHONY, B. O. L.
Tamil Pandit, St. Xavier's College
Palamcottah

E. M. GOPALAKRISHNA KONE

MADURA :: :: MADRAS

 1948 Price As. 6.

Revised Edition 1948.

முகவுரை

ஒரு பாஷையைப் படிக்கும்போது பிள்ளைகள் உற்சாகமாகவே இருக்கவேண்டும். கண்ணுற்கண்ட பொருள்களின் பெயர்களைச் சொல்லவும், அவைகளைப் பற்றிய சிறு சிறு வாக்கியங்கள் அமைக்கவும் மாணவர்கட்குப் பயிற்சி வேண்டும். அப்பயிற்சி, விளையாட்டு முறையில் அமைந்திருப்பதே சிறந்தது. இவ்வாறு விளையாட்டுப் போல், அரிய பெரிய விஷயங்களைக் குழந்தைகளுக்கு ஊட்டி விடலாம்.

1939-ம் வருடம் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ள ஆரம்பப் பாடசாலைகளின் புதிய பாடத் திட்டத்திற் கிணங்க இப்புத்தகம் வெளிவந்துள்ளது.

முதல் வகுப்பில் கற்றுக்கொண்ட சொற்களுக்கு மேல் 400 சொற்கள் அதிகமாகக் கற்றுக் கொள்வதற்குத் தக்க பாடங்களும், படித்த பாடங்களில் கேட்கும் கேள்விகளுக்கு ஒரே வரியில் சுருக்கமான விடையெழுதும் சக்தியை அபிவிருத்தி செய்யத் தக்க பாடங்களும் சிறு கதைகளை நடித்துக் காட்டுவதற்கேற்ற பாடங்களும் இதில் எழுதப்பட்டுள்ளன. பிள்ளைகளுக்கு உற்சாக மூட்டும் பற்பல விளையாட்டுப் பாடல்களும், அபிநயப் பாடல்களும், விடுகதைகளும், பழமொழிகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்புத்தகத்தில் வந்துள்ள பாடங்களில் 40 பங்கு மௌனமாக வாசிப்பதற்குப் பிள்ளைகளின் அறிவிற்கும், ஆற்றலுக்கும் தக்க பாடங்களை ஆசிரியர் எடுத்துக் காட்டுவாராக.


இலக்கணத்தின் குறியீடுகளைக் குறிக்காமலே மாணவர் எளிதில் அறிந்துகொள்ளும் பொருட்டுப் பாடங்கள் அமைந்திருக்கின்றன. கொடுக்கப்பட்டிருக்கும் பயிற்சிகளை மாணவர்கள் பயில, ஆசிரியர்கள் பெரிதும் கவனிப்பார்களாக.

ஆசிரியர்.


புது முறைத்

தமிழ் மணி வாசகம்


இரண்டாம் புத்தகம்




பழக் கூடை



பிரம்பு நாற்காலி




தீப்பெட்டி




மரப்பலகை




மாந்தோப்பு



குறிப்பு :—இப்படங்களின் பெயர்களைப் பிள்ளைகள் கற்பலகையில் எழுதவும்.




குறிப்பு:—இப்படங்களின் பெயர்களைப் பிள்ளைகள் கற்பலகையில் எழுதவும்.



1.
2.
3.
4.
5.
6.
7.
8.
9.
10.
11.
12.
13.
14.
15.
16.
17.
18.


குறிப்பு :—படத்தில் இலக்கம் இட்டவைகளின் பெயர்களைக் கற் பலகையில் எழுதவும்.

பாடம் 2




இது என்ன ?

இது ________




இது என்ன ?

இது ________




இது என்ன ?

இது ________



இது என்ன ?

இது ________




இது என்ன ?

இது ________



இது என்ன ?

இது ________



இது என்ன ?


இது ________

1 2 3 4 5
6 7 8 9 10

இது என்ன ?

இது ________

பாடம் 3



இது ஒரு பேனா

இது ஒரு பேனாவா ?

இது என் சட்டை

இது என் சட்டையா ?

அது என் பை

அது என் பையா ?

அது யாருடைய பேனா ?

அது என் பேனா

இவன் என்ன செய்கிறான் ?

இவன் படிக்கிறான்

அவன் யார் ?

அவன் என்னுடைய தம்பி

அவர்கள் என்ன செய்கிறார்கள் ?

அவர்கள் ஓடுகிறார்கள்

இவன் யார் ?

இவன் ஒரு குள்ளன்

நான் கையில் பேனா வைத்திருக்கிறேன்

நான் பெட்டி வைத்திருக்கிறேன்

நான் சுவர்களுக்கு இடையில் நிற்கிறேன்

பாடம் 4



இவை பேனாக்கள்

இவை பேனாக்களா ?

இவை என் சட்டைகள்

இவை என் சட்டைகளா?

இவை என் பைகள்

இவை என் பைகளா ?

இவர்கள் படிக்கிறார்கள்

இவர்கள் படிக்கிறார்களா?

இவை புத்தகங்கள்

இவை புத்தகங்களா ?

நான் படிக்கிறேன்
நீ படிக்கிறாய்

அவன் படிக்கிறான்
அவள் படிக்கிறாள்

நாங்கள் படிக்கிறோம்
நீங்கள் படிக்கிறீர்கள்

அவர்கள் படிக்கிறார்கள்

பாடம் 5

விரலை மடக்கு	தலையை ஆட்டு
கையை மடக்கு	பந்தை எடு
கையை உயர்த்து	பந்தைப் பிடி
கையைக் கீழே போடு	பந்தைப் பிடுங்கு
தோளை அசை	மேசையைத் துடை

பந்து - பந்தை	மேசை - மேசையை
விரல் - விரலை	தோள் - தோளை
கை - கையை	தலை - தலையை

கோயிலுக்குப் போ	குளத்துக்குப் போகாதே
தந்தைக்குப் பணி	பள்ளிக்கூடத்திற்குப் போ
தம்பிக்குச் சோறு கொடு	மாட்டுக்குத் தண்ணீர் வை

தம்பி—தம்பிக்கு	தந்தை—தந்தைக்கு
மாடு—மாட்டுக்கு	கோயில்—கோயிலுக்கு
குளம்—குளத்துக்கு	பள்ளிக்கூடம்—பள்ளிக்கூடத்திற்கு


அணில் பாட்டு

அணிலே அணிலே
அழகிய அணிலே
வாலைத் தூக்கி
மரத்தில் ஏறிக்
காயைப் பறித்துக்
கையில் வைத்துப்
பல்லால் கடித்து
அழகாய்த் தின்னும்
அணிலே அணிலே
அழகிய அணிலே



ஆடும் மயில்

மயிலே மயிலே அழகிய மயிலே
பச்சை யோடு நீலம் கலந்த
தோகை விரித்துக் காலைத் தூக்கி
அழகாய் நின்று ஆடும் மயிலே
மயிலே மயிலே அழகிய மயிலே



பாடம் 6



மரப்பாச்சிப் பொம்மை இது
சிறந்த நல்ல பொம்மை இது
சித்திரைத் திருவிழாவில்
சீரங்கக் கோவிலிலே
சின்னக்காள் வாங்கித் தந்த
சிங்காரப் பொம்மை இது



உருட்டுச் செட்டிப் பொம்மை இது
உருண்டு உருண்டு போகும் இது
ரயில் வண்டி போகையிலே
தஞ்சாவூர் ஸ்டேஷனிலே
பஞ்சமணி வாங்கித்தந்த
பருத்த நல்ல பொம்மை இது



சட்டைக்காரப்பொம்மை இது
தட்டிவிழிக்கும் பொம்மை இது
பட்டணத்துக் கடையிலே
எட்டு மணி வேளையிலே
சின்னத்தான் வாங்கித் தந்த
சீரான பொம்மை இது

பாடம் 7

ஆற்றில் தண்ணீர் ஓடுகிறது

வீட்டில் அம்மாள் இருக்கிருள்

காலையில் சூரியன் உதிக்கிறது

குளத்தில் மீன் இருக்கிறது

கிணற்றில் தவளை கத்துகிறது

பெட்டியில் சட்டை இருக்கிறது

தெருவில் வீடு இருக்கிறது

மேசையில் மைக்கூடுகள் இருக்கின்றன

கூடுகளில் குஞ்சுகள் இருக்கின்றன

பள்ளிக்கூடத்தில் பெஞ்சுகள் இருக்கின்றன

ஆறு—ஆற்றில்	பெட்டி—பெட்டியில்
வீடு—வீட்டில்	தெரு—தெருவில்
காலை—காலையில்	மேசை—மேசையில்
குளம்—குளத்தில்	கூடுகள்—கூடுகளில்
கிணறு—கிணற்றில்	பள்ளிக்கூடம்—பள்ளிக்கூடத்தில்

பாடம் 8

நாம் காலால் நடக்கிறோம்
நாம் பூட்டால் பெட்டியைப் பூட்டுகிறோம்
சீதை வாளியால் தண்ணீர் இறைக்கிறாள்
கண்ணன் பென்சிலால் எழுதுகிறான்

தண்ணீரால் கழுவு	கோலால் அள
கண்ணால் காட்டு	காலால் நட


கத்தி—கத்தியால்	துணி—துணியால்
கால்—காலால்	வாளி—வாளியால்
கண்—கண்ணால்	பென்சில்—பென்சிலால்
கோல்—கோலால்	தண்ணீர்—தண்ணீரால்

இதன்படி செய்

வா	கைகளைக் கீழே விடு
நட	கண்ணை மூடு
நில்	கண்ணைத் திற
போ	கதவிடம் போ
கை நீட்டு	கதவைத் திற
கை மடக்கு	கதவை மூடு
கை தட்டு	சன்னலைத் திற

கைகளை மேலே உயர்த்து
உடம்பை முன் பக்கம் வளை
உடம்பைப் பின் பக்கம் வளை

பயிற்சி



மூட்டை	நிலத்தை	பாடங்களை
பழத்தை	புத்தகத்தை	எலியை

சுமைகாரன் மூட்டை சுமப்பான்

உழவன் ______________ உழுவான்

மாணவன் ______________ படிப்பான்

எலி ______________ திருடும்

பூனை ______________ பிடிக்கும்

குரங்கு ______________ தின்னும்

பயிற்சி

1. ________ கறக்கிருன்
2. பந்தை ________ பிடி
3. பென்சிலால் ________ எழுது.
4. மாட்டுக்குத் ________ வை.
5. குதிரைக்கு ________ வால்.
6. கிணற்றில் தவளை ________ .
7. மேசையில் மைக்கூடுகள் ________ .
8. கிணற்றில் தவளைகள் ________ .
9. கூடுகளில் குஞ்சுகள் ________ .
10. குளத்தில் ________ துள்ளுகிறது.

மேலே கோடிட்ட இடங்களில் கீழேயுள்ள வார்த்தைகளில் பொருத்தமானவைகளைச் சேர்க்கவும்.

மீன்	நீண்ட	வசிக்கும்
தீனி	கடிதம்	வசிக்கின்றன
பாலை	கையால்	இருக்கின்றன

பாடம் 9




உழவன் நிலத்தை உழுகிறான்.



மாணாக்கன் பாடம் படிக்கிறான்.



கூலிக்காரன் கூலி வேலை செய்கிறான்.



மிட்டாய்க்காரன் மிட்டாய் விற்கிறான்.



அம்மா சோறு சமைக்கிறாள்.



தம்பி அழுது கொண்டிருக்கிறான்.




வண்டிக்காரன் வண்டி ஓட்டுகிறான்.




தபால்காரன் கடிதம் கொடுக்கிறான்.

பாடம் 10



மோட்டாரில் ஏறுகிறான்.



மோட்டாரை ஓட்டுகிறான்.



கொடியைப் பிடிக்கிறான்.




மோட்டாரில் ஏறுகிறாள்.



தெருவில் ஓட்டுகிறாள்.

பாலத்தைக் கடக்கிறாள்.



மோட்டார் விழுகிறது.

தங்கை விழுகிறாள்.

பயிற்சி

என்ன




மனிதன் என்ன செய்கிருன்?

மனிதன் ————————



காகம் என்ன செய்கிறது?

காகம் ————————




சைக்கிள் என்ன செய்கிறது?

சைக்கிள் ————————



சிறுவன் என்ன செய்கிருன்?

சிறுவன் ————————



குதிரை என்ன செய்கிறது?

குதிரை ————————




பாப்பா என்ன செய்கிறது?

பாப்பா ————————



இந்த மரத்தின் பெயர் என்ன?

இந்த மரம் ————————




இந்த இலையின் நிறம் என்ன?

இந்த இலையின் நிறம் ————


பயிற்சி

எங்கே



நீ எங்கே போகிறாய் ?

நான் ______________




உன் பெற்றோர் எங்கே இருக்கிறார்கள் ?

என் பெற்றோர் ______________




நீ காலையில் எங்கே குளிக்கிறாய்?

நான் ______________




நீ எங்கே விளையாடுகிறாய் ?

நான் ______________



நீ எங்கே படுக்கிறாய் ?

நான் ______________



உன் புத்தகம் எங்கே ?

என் புத்தகம் ______________

பாடம் 11

காகமும் பையனும்



காக்கா, நீ எங்கிருந்து வருகிறாய்?

அழகான காக்கா, எங்கிருந்து வருகிறாய்?

கரிய காக்கா, எங்கிருந்து வருகிறாய்?

வாயில் என்ன வைத்திருக்கிறாய்?


உன் வீடு எங்கே இருக்கிறது?

உன் வீட்டை எப்படிக் கட்டுவாய்?

மழை வந்தால் என்ன செய்வாய்?

குஞ்சுகளை எப்படிப் பறக்க வைப்பாய்?

பயிற்சி



குறிப்பு :—ஒவ்வொரு படத்தைப் பற்றியும் ஒவ்வொரு வாக்கியம் எழுது.

பாடம் 13

ஓடு ஓடினேன் ஓடினாய் ஓடினான்

நான் வண்டிக்கு ஓடினேன்.

நீ பள்ளிக்கூடத்திற்கு ஓடினாய்.

அவன் கடைக்கு ஓடினான்.

வண்டி எங்கே நின்றது?

வண்டி வீதியில் நின்றது.

அவன் கடைக்கு ஏன் ஓடினான்?

அவன் காய் வாங்கக் கடைக்கு ஓடினான்.

எடு எடுத்தேன் எடுத்தான்

அடி அடித்தேன் அடித்தான்

மணியை எடு.

தம்பி, மணியை என்ன செய்கிறாய்?

நான் மணியை எடுக்கிறேன்.

தம்பி, மணியை என்ன செய்தாய்?

நான் மணியை எடுத்தேன்.

தங்கை, தம்பி மணியை என்ன செய்தான்?

அண்ணா, தம்பி மணியை எடுத்தான்.

பின் என்ன செய்தான்? மணி அடித்தான்.

பாடம் 12



பூனை

இந்தப் பூனையைப் பார்.

இதன் நிறம் என்ன?

இதன் நிறம் சாம்பல் நிறம்.

இதற்கு எத்தனை கால்கள் இருக்கின்றன?

இதற்கு நான்கு கால்கள் இருக்கின்றன.

இதற்கு எத்தனை கண்கள் இருக்கின்றன?

இதற்கு இரண்டு கண்கள் இருக்கின்றன.

நகங்கள் எப்படி இருக்கின்றன?

நகங்கள் கூர்மையாய் வளைந்து இருக்கின்றன.


இது எங்கே உறங்கும்?

இது அடுப்படியில் உறங்கும்.

பூனை என்ன குடிக்கும்?

பூனை பால் குடிக்கும்.

பூனை சாம்பல் நிறமானது. அதற்கு நான்கு கால்கள் உண்டு. அது பதுங்கிப் பதுங்கி மெதுவாய்ப் போகும்; பாலைத் திருடிக் குடிக்கும். அம்மாவைக் கண்டவுடன் அது ஓடிவிடும்.



சுகாதாரப் பாட்டு

கொஞ்சும் கிளிமொழிக் கோதையரே—களி
கூர்ந்து கும்மி அடித்திடுவோம்
அஞ்சாமற் பருத்தி ஆடையணிந்து நாம்
ஆடிக் கும்மி யடித்திடுவோம்
சிக்கனமாகவே மேட்டினில் வீட்டினைத்
தெரிந்த சூர்ய வெளிச்சமதும்
மிக்கிடவே நல்ல காற்றும்புகுந்திட
மெல்லியலே செய்தல் நல்லதடி

தேகத்திற்காகத் திறமுள்ள உண்டியைத்
தேன்மொழியே தினம் தேர்ந்தெடுத்து
ஆகும்விதிப்படி உண்டு வந்தால்—பல
மாகும்என்றே நின்று கும்மியடி


பாடம் 14



நல்ல பையன்

1. நான் என் பெற்றோர்க்குக் கீழ்ப்படிந்து நடப்பேன்.
2. நான் அவர்களை நேசிப்பேன்.
3. நான் அவர்களுக்கு நன்றி காட்ட வேண்டும்.
4. அவர்கள் வேண்டாம் என்ற காரியத்தை எப்பொழுதும் செய்யமாட்டேன்.
5. என் தம்பியோடும், அண்ணனோடும், தங்கையோடும், அக்காளோடும் சண்டை போடமாட்டேன்.
6. நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாய் வாழ்வோம்.

பாடம் 15



ஒரு மோட்டார் வருகிறது.

எதிரே ஆடு நிற்கிறது.

ஒரு மோட்டார் வருகிறது.

ஒரு ஆடு குறுக்கே
ஓடுகிறது.

ஆடு எங்கே நின்றது?
ஆடு வீதியில் நின்றது.
மோட்டார் என்ன செய்தது?
மோட்டார் ஆட்டைத் தள்ளியது.
மோட்டார் வேகமாய் ஓடினது.

வருகிறது	வந்தது
நிற்கிறது	நின்றது
தள்ளி விடுகிறது	தள்ளிவிட்டது

பாடம் 16

கெட்ட பையன்

ஒரு பையன் தெருவில்
நிற்கிறான்.
அவன் ஜனங்களைத்
திட்டிக்கொண் டிருக்கிறான்.

ஒரு பெரியவர் வருகிறார்.

அவன் அவரைத் திட்டுகிறான்.

அவர் அவனுக்குக் காசு
கொடுக்கிறார்.

ஒரு பலவான் வருகிறான்.
சிறுவன் திட்டுகிறான்.
பலவான் சிறுவனைக்
கன்னத்தில் அறைகிறான்.

சிறுவன் அழுதுகொண்டு
போகிறான்.



கேள்விகள்

1. பையன் எங்கே நின்றான்?
2. அவன் என்ன செய்துகொண்டு இருந்தான்?
3. தெருவில் வந்தவர் யார்?
4. அவர் அவனுக்கு என்ன தந்தார்?
5. வேறு யார் வந்தார்?
6. சிறுவனுக்கு அறை கொடுத்தவன் யார்?

விடைகள்

1. ஒரு பையன் தெருவில் நின்றான்.
2. அவன் வழியில் போகிறவர்களைத் திட்டிக் கொண்டிருந்தான்.
3. தெருவில் ஒரு பெரியவர் வந்தார். அப் பையன் அவரைத் திட்டினான்.
4. அவர் அவனுக்குக் காலணா கொடுத்தார்.
5. பின்னே ஒரு பலவான் வந்தான். சிறுவன் அவனைத் திட்டினான்.
6. அந்தப் பலவான் சிறுவனுக்கு ஒரு அறை கொடுத்தான்.

பாடம் 17

இரண்டு மாணவர்

முத்து :— முருகா, நமது பள்ளிக்கூட விடுமுறை எப்போது தொடங்குகிறது?

முருகன் :— நாளை, சனிக்கிழமை தொடங்குகிறது.

முத்து :— நீ விடுமுறை நாளில் என்ன செய்வாய்?

முருகன் :—தஞ்சாவூரில் என் மாமா இருக்கின்ருர். நான் அவர் வீட்டுக்குப் போகிறேன்.

முத்து :— நீ ஏன் அங்குப் போகின்ருய்?



முருகன் :—அங்குத் திருவிழா நடக்கப் போகிறது; அதைப் பார்க்க வரும்படி என் மாமா கடிதம் எழுதியிருக்கிருர்.

முத்து :—திருவிழாவில் என்ன நடக்கும்?

முருகன் :—ஏராளமான ஜனங்கள் வருவார்கள். தெப்பத்தில் சப்பரம் இருக்கும். அதை எல்லோரும் இழுப்பார்கள். பார்க்க அழகாயிருக்கும். விருந்துகள் நடக்கும். நாங்கள் எல்லோரும் சாப்பிடுவோம்.

பயிற்சி

கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுது :—

வந்தேன்	வந்தோம்	வந்தான்	வந்தார்கள்
வந்தாய்	வந்தீர்கள்	வந்தாள்	

1. நான் வந்தேன்
2. நாங்கள் ________
3. நீ ________
4. நீங்கள் ________
5. அவன் ________
6. அவள் ________
7. அவர்கள் ________

பயிற்சி

நிற்கிறான்	நிற்கிறார்கள்	நிற்கிறேன்	நிற்கிறோம்
நிற்கிறாள்			
நிற்கிறது	நிற்கின்றன	நிற்கிறாய்	நிற்கிறீர்கள்


1. நான் நிற்கிறேன்
2. நாங்கள் ________
3. நீ ________
4. நீங்கள் ________
5. அவன் ________
6. அவள் ________
7. அவர்கள் ________
8. மாடு ________
9. மாடுகள் ________

மழையை அழைத்தல்

மழையே மழையே வா வா வா
மனது குளிர ஓடி வா
தாகம் ஆருது வா வா வா
தண்ணீ ராக ஓடி வா
வானத் திருந்து வா வா வா
வாடிய செடிமேல் ஓடி வா
மேகத் திருந்து வா வா வா
மின்னலி லிருந்து ஓடி வா

பாடம் 18

மிருகங்கள்



பசு சாந்தமுள்ள மிருகம். இதற்கு நான்கு கால்கள் உண்டு. இதற்கு இரண்டு கொம்புகள் உள்ளன. இது புல், வைக்கோல் முதலியவைகளைத் தின்னும். பசு பால் தரும். பசுவின் பால் இனிப்பாயிருக்கும். பாலைக் காய்ச்சி, தயிர் ஆக்கலாம். தயிரிலிருந்து வெண்ணெய் எடுக்கிறோம். வெண்ணெயை உருக்கி நெய்யாக்குகிறோம்.



ஆடுகளை வீட்டில் வளர்க்கின்றார்கள். ஆட்டுக்கு நான்கு கால்கள், இரண்டு கொம்புகள் உள்ளன. ஆடுகளில் பலவகை உண்டு. அவை சாதுவான மிருகம். ஆட்டுக்குட்டி அழகாயிருக்கும். வெள்ளாட்டினுடைய பால் உடம்புக்கு நல்லது. ஆட்டின் தோல் மனிதர்களுக்கு மிக்க உபயோகமானது.



நாய் நன்றி உள்ள பிராணி. அது ஒருவர் செய்த உபகாரத்தை மறக்காது; தன் எஜமானன் வீட்டைக் காவல் செய்யும்; எஜமானனைக் கண்டால் வாலை ஆட்டும். நாய் வேட்டையாட உதவும்; திருடனைக் கண்டால் குரைக்கும்.

கேள்விகள்

1. பசு எப்படிப்பட்ட மிருகம் ?
2. அது எவைகளைத் தின்னும் ?
3. பசுவினல் என்ன நன்மை உண்டு ?
4. ஆடுகளினல் நமக்கு என்ன பயன் ?
5. நாய் எப்படிப்பட்ட பிராணி ?

பயிற்சி

கோடிட்ட இடத்தில் தகுந்த சொற்களை எழுது :—

———புல் தின்னும் (ஆடு, மாடு, யானை, பூனை)

——— கண்டால் வாலை ஆட்டும் (குதிரை, மாடு, நாய்)

———சாந்தமான மிருகம் (பசு, ஆடு, புலி, பூனை)

கீழ்க்கண்ட வார்த்தைகளைக்கொண்டு வாக்கியங்கள் எழுது :—

வெண்ணெய், குரைக்கும், உருக்கி, ஆட்டி.

இனிப்பு	கசப்பு	புளிப்பு
துவர்ப்பு	கரிப்பு	காரம்

வாழைப் பழத்தின் சுவை என்ன ?

வாழைப்பழம் இனிப்பு.

சுவைகளைச் சொல்


மாம்பழம்	எலுமிச்சம்பழம்	இஞ்சி
மாங்காய்	பாகற்காய்	மிளகு
கரும்பு	வாழைக்காய்	புளி

பாடம் 19

பறவைகள்




கோழியை வீட்டில் வளர்க்கிறார்கள். வளர்ப்பவர்கள் தவிட்டை உருண்டையாக உருட்டி இதற்கு ஆகாரமாகப் போடுவார்கள். இது பூச்சி, புழுக்களையும், தானியங்களையும் தின்னும். பெண் கோழிக்குப் பெட்டைக் கோழி என்று பெயர். ஆண் கோழிக்குச் சேவல் என்று பெயர். சேவல் அதிகாலையில் கூவி மனிதரை எழுப்பும். பெட்டைக் கோழி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். கோழி முட்டை மருந்தாகப் பயன்படுகிறது. இவை வளரும் வீடுகள் சுத்தமாக இரா. இவற்றால் அதிக உயரம் பறக்க முடியாது.



புறா வஞ்சகம் இல்லாத பறவை. புறாக்களில் பலவகை உண்டு. சில புறாக்கள் பெரியவையாயும், சில அழகாயும் இருக்கும். இவை முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும். சிலர் புறாக்களைக் கூடுகளில் வைத்துப் பிரியமாய் வளர்க்கிறார்கள். புறாக்கள் கூட்டங் கூட்டமாய் வசிக்கும்; தானிய தவசங்களைத் தின்னும்; உயரத்தில் பறக்கும்.

மயில் அழகான பறவை. ஆண்மயிலுக்கு நீண்ட தோகை உண்டு. கார் காலத்தில் மயில் தோகையை விரித்து ஆடும். அப்பொழுது அது பார்க்க அழகாயிருக்கும். இதற்குக் கூரிய அலகு உண்டு. இது சோலைகளிலும், காடுகளிலும் வசிக்கும். அதிக உயரம் பறக்க இதனால் முடியாது.



கேள்விகள்

1. வீடுகளில் வளரும் பறவைகள் யாவை?
2. கோழியின் உணவுகள் யாவை?
3. புரு எப்படிப்பட்ட குணம் உடையது?
4. மயில் எந்தக் காலத்தில் ஆடும்?
5. அதன் அலகு எப்படி இருக்கிறது?

பயிற்சி

கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளைப் பொருத்தமான இடத்தில் சேர்த்து வாக்கியம் அமைக்க:—


மயில்	உயரப் பறக்கும்
கோழி	அழகான பறவை
புரு	ஆடும்
மயில் தோகை விரித்து	தானிய தவசங்களைத் தின்னும்

பாடம் 20

வண்டிகள்




இது சைக்கிள் வண்டி. இதற்கு இரண்டு சக்கரங்கள் உண்டு. இதில் ஏறி உட்கார்ந்து பெடலைக் காலால் அமுக்க வேண்டும். அப்பொழுது சக்கரங்கள் உருளும். இதைக் காலால் மிதித்து ஓட்டுகிறோம். ஆதலால், இதற்கு மிதி வண்டி என்று பெயர்.



இது மோட்டார் வண்டி. இதற்கு நான்கு சக்கரங்கள் உண்டு. சக்கரங்களைச் சுற்றி ரப்பர்க் குழாய்கள் பூட்டப் பட்டிருக்கின்றன. அந்த ரப்பர்க் குழாய்க்கு ‘டயர்’ என்று பெயர். டயருக்குள் காற்று அடைக்கப்பட்டிருக்கிறது. அதனால் இது விரைவாக ஓடும்.

இது புகை வண்டித் தொடர். புகை வண்டியின் பின் பல வண்டிகள் கோக்கப் பட்டிருக்கின்றன. புகை வண்டி மற்ற வண்டிகளை இழுத்துக் கொண்டு போகும். அதற்கு



'என்ஜின்' என்று பெயர். அது தண்டவாளங்களின் மீது ஓடும். இதில் நாம் சுகமாய்ப் பிரயாணம் செய்ய லாம்.

கேள்விகள்

1. எதற்கு மிதிவண்டி என்று பெயர்?
2. மோட்டார் வண்டிக்கு எத்தனை சக்கரங்கள்?
3. 'டயர்' என்று எதற்குப் பெயர்?
4. புகை வண்டிக்கு வேறு பெயர் என்ன?

பயிற்சி

கோடிட்ட இடத்தில் தகுந்த சொற்களை எழுது :—

1. சைக்கிளுக்கு ———————— சக்கரங்கள் உண்டு.
2. மோட்டாருக்கு ———————— சக்கரங்கள் உண்டு.
3. என்ஜின் ———————— இழுத்துச் செல்லும்.

கீழ்க்கண்ட சொற்களை வைத்து வாக்கியங்கள் உண்டாக்கு :—

மிதி வண்டி	சுற்றி	டிரைவர்
பெடல்	ஓட்டுகிற	குழாய்

வெள்ளை	கறுப்பு	பச்சை
சிவப்பு	நீலம்	மஞ்சள்

காகம் என்ன நிறம்? காகம் கறுப்பு நிறம்.

நிறங்களைச் சொல் :—

யானை	காகம்	கொக்கு	சுண்ணாம்பு
கிளி	தங்கம்	வெள்ளி	வெற்றிலை
இரத்தம்	இரும்பு	தாழம்பூ	ரோஜாப்பூ


———

பாடம் 21

கடை வியாபாரம்

கடைக்காரன் :—பையா, உனக்கு என்ன வேண்டும்?

மாணவன் :—எனக்கு ஒரு பேனுக்கட்டை வேண்டும்.



கடை :—நல்லது; மரக்கட்டையால் செய்தது வேண்டுமா? தந்தத்தால் செய்தது வேண்டுமா?

மாண :—எனக்கு மரக்கட்டையால் செய்த கறுப்புப் பேனு வேண்டும்.

கடை :—அதன் விலை ஒரு அணு.

மாண :—விலை அதிகமா யிருக்கிறதே!

கடை :—(மற்றென்றைச் சுட்டி) அந்தப் பேனு அவ்வளவு விலை இல்லை; அரையணு.

மாண :—நான் அதை வாங்கிக் கொள்ளுகிறேன். எனக்கு ஒரு டசன் உருக்கு நிப்பும் வேண்டும். அவற்றின் விலை என்ன?

கடை :—அவைகளை உனக்குச் சரசமாய்க் கொடுக்கிறேன். அவைகளின் விலை முக்காலணு.

மாண :—சரி, எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுகிறேன். நான் உங்களுக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும்?

கடை :—எல்லாம் சேர்த்து $1\frac{1}{4}$ அணு கொடுக்க வேண்டும்.

மாண :—என்னிடத்தில் சில்லறை இல்லை. ஒரு ரூபா இருக்கிறது.

கடை :—சரி, கொடு. இதோ மீதி $14\frac{3}{4}$ அணு.

கேள்விகள்

1. மாணவன் எங்கே போனான்?
2. கடைசியில் என்ன வாங்கினான்?
3. அவன் கடைக்காரனுக்குக் கொடுக்க வேண்டியது எவ்வளவு?

பயிற்சி

கடையில் கிடைக்கும் போருத்தமான சாமான்களை எடுத்துச் சோல்:—

சவுளிக்கடை ——————வடை கிடைக்கும்.
பூக்கடை ——————பாத்திரம் கிடைக்கும்.
பாத்திரக்கடை ——————பூ கிடைக்கும்.
பலகாரக்கடை —————— சவுளி கிடைக்கும்.

பாடம் 22

உடம்பு

1. நமது உடம்பைத் தோல் மூடிஇருக்கிறது.
2. தோலுக்குள் மாமிசமும், நரம்பும் உள்ளன.
3. இறைச்சி எலும்பை மூடி இருக்கின்றது.
4. எல்லா எலும்பும் சேர்ந்து எலும்புக் கூடு ஆகும்.
5. மண்டைக்குள் மூளை இருக்கிறது.
6. நம்முடைய உணவு வாய் வழியாக வயிற்றுக்குள் போகின்றது.
7. நம்முடைய உணவு ஜீரணம் ஆகி இரத்தம் ஆகிறது.



எலும்புக் கூடு

8. இரத்தம் இருதயத்திற்குள் போகிறது.
9. இருதயத்திலிருந்து இரத்தம் பல இடத்திற்கும் போகிறது.
10. அதனால் நாம் உயிர் வாழ்கிறோம்.

கேள்விகள்

1. உடல் எதனால் மூடப்பட்டிருக்கிறது?
2. தோலுக்குள் என்ன இருக்கிறது?
3. எது எலும்பை மூடியிருக்கிறது?
4. எல்லா எலும்பும் சேர்ந்த பிறகு அதன் பெயர் என்ன?
5. மூளை எங்கே இருக்கிறது?



ஆலமரப் பாட்டு

1. ஆற்றங்கரை ஓரத்திலே
அழகான ஆலமரம்
காற்றடித்தால் பந்தலைப்போல்
களிப்படைய இடங்கொடுக்கும்

2. பச்சைஇலைப் பந்தலைப்போல்
படர்ந்த நல்ல ஆலமரம்
பட்டப்பகல் வெய்யலிலே
படுத்திருந்தால் சுகங்கொடுக்கும்

3. மாலையில் மனிதர்களும்
வேலையால் களைத்துவரின்
சாலையில் ஆலமரம்
தங்க நல்ல இடங்கொடுக்கும்

பாடம் 23

தாயாரும், வைத்தியரும்

ஒரு பையன் படுக்கையில் படுத்திருக்கிறான். அவனால் உட்கார முடியாது. அவன் முகம்



வெளுத்திருக்கின்றது. பக்கத்தில் ஒரு பெரியவர் நிற்கிறார். அவர் அவன் கையைப் பிடித்துப் பார்க்கிறார். அவர்தான் வைத்தியர். பையனுடைய நாடி விரைவாய் ஓடுகிறது. அவன் கைகளும், நெற்றியும் சூடாயிருக்கின்றன. அவனுக்குக் காய்ச்சல் வந்திருக்கிறது. அந்த ஏழைப் பையன் எதிரில் அவன் தாய் நிற்கிறாள்; இரவில் தூங்காமல் அவனைப் பார்த்துக் கொண்டே இருக்கிறாள்; அவனுக்கு வேண்டியவைகளை எல்லாம்

கொடுக்கிருள். அவள் ஆவலோடு வைத்தியர் முகத்தைப் பார்க்கிருள். 'நோயாளனைச் சுகமாக்க முடியுமா? இந்த நோய் ஆபத்தானதா? பையன் பிழைத்துக் கொள்வாஞ?' என்ற எண்ணங்கள் அவள் மனத்தில் ஓடுகின்றன. ஆகையால் அவள் வைத்தியர் முகத்தைப் பார்க்கிருள். வைத்தியர் தாயாரை நோக்கி, "நான் சொல்லுவதை நம்புங்கள். பையன் சுகம் பெறுவான். விரைவில் அவனுடைய பழைய பலம் வந்து விடும்" என்று ஆறுதல் சொல்லுகிருர்; செய்ய வேண்டியது இன்னது என்று ஒரு தாளில் எழுதுகிருர். "அதில் எழுதி யிருக்கிறபடி கம்பவுண்டர் மருந்துகள் சேர்த்துக் கொடுப்பார். அந்த மருந்து சுகத்தைக் கொடுக்கும். அவன் சுகமாகி விடுவான்" என்ருர்.

கேள்விகள்

1. இந்தப் படத்தில் யாரைப் பார்க்கிருய்?
2. பையன் எங்கே படுத்திருக்கிருன்?
3. அவனுல் உட்கார முடியுமா?
4. நாடி பார்க்கிறவரை எப்படிக் கூப்பிடுவாய்?
5. பையனுடைய நாடி எப்படி அடிக்கிறது?
6. படுக்கையின் பக்கத்தில் நிற்பவர் யார்?
7. தாய் மனத்தில் என்னென்ன எண்ணங்கள் ஓடுகின்றன?
8. வைத்தியர் அவளிடம் என்ன சொன்னுர்?
9. மருந்துகளைச் சேர்த்துக் கொடுக்கின்றவர் யார்?

பாடம் 24

அசுத்தமுள்ள பையன்

ஒரு காலத்தில் ஒரு பையன் இருந்தான். அவனுடைய முகமும், கைகளும் எப்பொழுதும் அழுக்காயிருக்கும். ஒரு நாள் அவனுடைய தாய்



"சோமு, இங்கே வா. உன்னைக் குளிப்பாட்ட வேண்டும்" என்று கூப்பிட்டாள். உடனே சோமு, "அம்மா, முடியாது; அம்மா, முடியாது" என்று வெளியே ஓடிவிட்டான். சோமு இப்படி வெகு தூரம் ஓடினான்; கடைசியாக ஒரு சிறு குளத்தின் அருகே வந்தான். அந்தக் குளம் அசுத்தமுள்ள பையனைக் கண்டதும், "தம்பி, தம்பி, கொஞ்சம் பொறு, 'எப்படிச் சுத்தமாயிருக்கிறது' என்பதை உனக்கு நான் காட்டுகிறேன்" என்று அவன் பின்னே ஓடினது. பையன் அலறிக்கொண்டே

ஓட முயன்றான். ஆனால், குளம் அவன் காலைப் பிடித்துக் கொண்டது; பின், அவனை இழுத்துக் கொண்டு தண்ணீருக்குள் போனது; அவனை நன்றாய்க் குளிப்பாட்டினது. அந்தப் பையன் ஈரத்தோடு அம்மாவிடம் வந்தான். அவனைக் கண்டு அவனுடைய தாய் சிரித்தாள்; "இப்பொழுது சுத்தமாயிருக்கிறாய். உன்னைக் குளிப்பாட்டி விட்டது யார்?" என்று கேட்டாள்.

கேள்விகள்

1. சோமுவுடைய கைகளும், முகமும் எப்படி இருந்தன?
2. தாய் குளிக்கக் கூப்பிட்டவுடன் சோமு என்ன செய்தான்?
3. குளம் என்ன சொன்னது?
4. குளம் எதற்காகச் சோமுவின் பின் ஓடிற்று?
5. குளம் சோமுவை என்ன செய்தது?
6. தாய் சோமுவைப்பார்த்து என்ன கேட்டாள்?

கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களைச் சேர்க்க :—

1. ஒரு காலத்தில் ஒரு———— இருந்தான். (குழந்தை, பெண், பையன்).
2. அவனுடைய கையும், முகமும் எப்பொழுதும்———— இருக்கும். (நீளமாய், அழுக்காய், பெரிதாய்).

வாக்கியம் உண்டாக்கு:—

அழுக்கு, குளித்தல், வெகு தூரம், அசுத்தம்.

பாடம் 25


தந்தையும் மகனும்

தந்தை :—முருகா, பள்ளிக்கூடத்தை விரும்புகிருயா?

முருகன் :—ஆம், அப்பா.

தந்தை :—பள்ளிக்கூடம் போக விரும்புவாய் என்று எனக்கு முன்னமே தெரியும். உனக்கு அதைப்பற்றிச் சொல்ல வில்லையா?

முருகன் :—முதலில் எனக்குப் பயமாயிருந்தது.



தந்தை :—என்ன பயம்?

முருகன் :—உபாத்தியாயர் அன்பாய் இருக்கமாட்டார் என்று நினைத்தேன்.

தந்தை :—பின் எப்படி யிருந்தார்?


முருகன் :— அவர் என்னிடம் மிகவும் அன்பாயிருந்தார்.

தந்தை :— நல்ல பிள்ளைகளிடத்தில் உபாத்தியாயர் மிகவும் பிரியமாயிருப்பார்; அன்போடு பேசுவார். பாடம் நடக்கும்பொழுது ஒருவரோடும் பேசக்கூடாது; உபாத்தியாயர் கேட்ட கேள்விகளுக்கு மரியாதையாய்ப் பதில் சொல்லவேண்டும்; பாடம் கேட்கும் பொழுது கவனமா யிருக்க வேண்டும்; பிள்ளைகளோடு சண்டை போடக் கூடாது. இவ்வாறு நடந்தால் உபாத்தியாயர் பட்சமாயிருப்பார்.

தொனிகள்

குயில்கள் கூடிக் கூவிடுமாம்
குதிரை நன்ருய்க் கனைத்திடுமாம்
மயில்கள் அழகாய் ஆடிடுமாம்
மனிதர் கூடிப் பேசிடுவார்
பூனையும் பாம்பும் சீறிடுமாம்
பூவின் வண்டுகள் பாடிடுமாம்
ஆனை குரலால் பிளிறிடுமாம்
ஆந்தை இரவில் அலறிடுமாம்
கா்கா காவெனக் கபடமிகு
காகம் கூடிக் கரைந்திடுமாம்
கூகூகூவென இரவினிலே
கூகைகள் கூச்சல் போட்டிடுமாம்

பயிற்சி



குறிப்பு :—ஒவ்வொரு படத்தைப் பற்றியும் ஒவ்வொரு வாக்கியம் எழுது.

பாடம் 26

பருத்தி

நான் எப்படி ஆடையானேன் என்று தெரியுமா? பருவத்தில் மழை பெய்தது. உடனே உழுபவர்கள் என் கொட்டைகளைப் புன்செய் நிலத்தில் விதைத்தார்கள். சிறிது நாளைக்குள் பூமியிலிருந்து வெளியே கிளம்பினேன். என் பக்கத்தில் உள்ள களைகளை எல்லாம் உழவர்கள் பிடுங்கினார்கள். மூன்று மாதத்திற்குள் நான் பலன் கொடுக்கக் காய்த்தேன். சூரிய உஷ்ணம் எனக்கு மிகப் பிரியம். அதனுடைய வெப்பத்தினால் என் காய்கள் வெடித்து விட்டன.

அச்சமயத்தில் பெண்டு பிள்ளைகள் கூட்டங் கூட்டமாய் வந்தார்கள்; என்னைத் தோடுகளிலிருந்து பிரித்து எடுத்தார்கள். அப்பொழுது என்னைச் "சுளை" என்று சொன்னார்கள். ஆண்கள் என்னை மூட்டையாய்க் கட்டினார்கள்; வண்டியில் ஏற்றினார்கள்; பஞ்சாலைக்குக் கொண்டு போனார்கள்; அங்கு ராட்டினத்தில் போட்டு, என் சதையையும், கொட்டையையும் பிரித்தார்கள்; அப்பால் தக்ளியால் நூற்றார்கள். அதன் பிறகு நூலானேன்.

நெசவுக்காரர் நூலை வாங்கித் தறியிலிட்டு வேஷ்டி சேலை நெய்தார்கள். அவற்றை மனிதர் வாங்கி உடுத்திக் கொள்ளுகிறார்கள். தையற்கார

னிடம் துணியைக் கொடுத்துச் சட்டை தைத்துக் கொள்ளுகிருர்கள். மாணவரும், உத்தியோகஸ்தரும் அவற்றை அணிந்து கொள்ளுகிருர்கள்.

கேள்விகள்

1. எப்பொழுது உழவர்கள் பருத்தியை விதைக்கிருர்கள் ?
2. எந்த நிலத்தில் பருத்தியை விதைக்கிருர்கள் ?
3. காய் வெடித்த காலத்தில் என்ன செய்வார்கள் ?
4. பருத்தியை எதில் போட்டு நூற்கிருர்கள் ?
5. பருத்தி எவ்வாறு ஆடையாக்கப்படுகிறது ?
6. சட்டை தைப்பவன் பெயர் என்ன ?

பயிற்சி

கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை எழுது :—

புன்செய், பிரதேசங்களில், மாதத்தில், வெடிக்க, மடிகட்டி, தோடுகளிலிருந்து, சுளை, மூட்டை மூட்டையாக.

பருத்தி——நிலங்களில் நன்ருய் வளரும்; உஷ்ண —— அது நன்ருய் வளரும். முளைத்த காலாவது —— பூ பூத்துக் காய்த்து —— தொடங்கும். பெண்டுகளும் பிள்ளைகளும்——கொண்டு வெடித்த காய்களைத்——பிரித் தெடுப்பார்கள். இதற்குச்——என்று பெயர். பின்னர் —— ——கட்டி வண்டிகளில் போட்டுப் பஞ்சாலைக்குக் கொண்டு போவார்கள்.

பாப்பா பாட்டு

காலையி லெழுந்திரு   பாப்பா   கை
கால்முகங் கழுவு நீ   பாப்பா
சீலமாய்க் கடவுளைப்   பாப்பா   தினம்
சிந்தித்து வணங்கு நீ   பாப்பா

மாதா பிதா குருவைப்   பாப்பா   ஒரு
நாளும் மறவாதே   பாப்பா
ஆதார மாயவர்க்குப்   பாப்பா   நீ
அமைந்து நடக்கவேண்டும்   பாப்பா

நல்ல பழக்கத்திலே   பாப்பா   வாழ்
நாளைக் கழிக்கவேண்டும்   பாப்பா
பொல்லாத பிள்ளையென்று   பாப்பா   ஒரு
போதும் பெயரெடாதே   பாப்பா


பாடத்தைச் செவ்வையாகப்   பாப்பா   நீ
படிப்பதில் கவனம்கொள்   பாப்பா
மூடத்தைக் கொள்ளாதே   பாப்பா   நீ
முதியவர் வழிநடப்பாய்   பாப்பா

ஆசிரியர் சொல்லுவதைப்   பாப்பா   நீ
அன்புடனே கேட்கவேண்டும்   பாப்பா
மாசிலாத் தமிழ்மொழியைப்   பாப்பா   நீ
மகிழ்வுடன் கற்கவேண்டும்   பாப்பா

யுவ பாரதி

பயிற்சி

புத்தியுள்ள காகம்



படத்தைப் பார்த்துக் கதை சொல்லுதல்

பாடம் 27

புத்தியுள்ள காகம்

முதல் படத்தைப் பாருங்கள். அதில் ஒரு குடம் இருக்கிறது. குடத்திற்குள் அடியில் கொஞ்சம் தண்ணீர் இருக்கிறது. அதைக் குடிக்க ஒரு காகம் நிற்கிறது. எட்டித் தண்ணீர் குடிக்க அதற்கு முடியுமா? குடத்தின் வாயோ சிறிது. தண்ணீரோ அடியில் இருக்கிறது.

இரண்டாவது படத்தில் உள்ள குடத்தில் சிறுசிறு கற்கள் தெரிகின்றன. கற்கள் எப்படி அங்கு வந்தன? பக்கத்தில் கூழாங் கற்கள் கிடந்தன. அவைகளை ஒவ்வொன்ருய் எடுத்துக் காகம் குடத்திற்குள் போடுகின்றது. கற்கள் உள்ளே விழ விழத் தண்ணீர் மேலே வருகிறது.

மூன்ருவது படத்தைப் பாருங்கள். தண்ணீர் மேலே வருகிறது. காகம் குடத்தின் விளிம்பில் நின்றுகொண் டிருக்கிறது. அதற்கு இப்பொழுது இலேசாகத் தண்ணீர் குடிக்க முடிகிறது. அது தண்ணீர் குடித்துத் தாகத்தைத் தீர்த்துக் கொள்கிறது.

நான்காவது படத்தைப் பாருங்கள். காகம் பறந்து போகிறது. பறப்பதற்குப் பலம் எப்படி வந்தது? தாகத்தால் களைப்பா யிருக்கும்போது பறக்க முடியுமா? தண்ணீர் குடித்ததால் காகம் தைரியமாய்ப் பறந்து போகிறது.

. தண்ணீர் எட்டாது என்று காகம் வேறு இடம் போனால் தாகம் தீருமா? காகம் தன் புத்தியினால் தாகத்தைத் தீர்த்துக் கொண்டது.

கேள்விகள்

1. குடத்தில் தண்ணீர் எங்கே இருக்கிறது?
2. குடத்தின் மீது நிற்பது என்ன பறவை?
3. அதன் அலகுக்குத் தண்ணீர் எட்டுகிறதா?
4. இரண்டாவது படத்தில் குடத்தில் என்ன காண்கிறீர்கள்?
5. கற்கள் அங்கு எப்படி வந்தன?
6. காகம் கற்களை ஏன் கொண்டுவந்து போட்டது?
7. மூன்றாவது படத்தில் தண்ணீரும் கற்களும் எப்படி இருக்கின்றன?
8. தண்ணீர் ஏன் மேலே வந்தது?
9. காகம் இப்பொழுது என்ன செய்கிறது?
10. நாலாவது படத்தில் என்ன பார்க்கிறீர்கள்?
11. காகம் எப்படித் தன் தாகத்தைத் தீர்த்துக் கொண்டது?

பயிற்சி

கோடிட்ட இடத்தில் தகுந்த வார்த்தைகளை எழுது :—

ஒரு காகம்——இருந்தது. ஒரு இடத்தில் தண்ணீர்——குடம் இருக்கக்——. தண்ணீரோ குடத்தின்——இருந்தது. ஆதலால் சிறு சிறு——பொறுக்கிப் போட்டது. குடம் —— கற்கள் உள்ளே விழ விழ —— மேலே ——காகம் —— பறந்து விட்டது.

வா, போ பாட்டு

சுறுசுறுப்பானால் கிட்டே வா;
சோம்பேறியானால் எட்டிப் போ.


1. காலை மாலை ஓடி ஆடி
பயிற்சி செய்யும் காளை வா;
மூலை வீட்டில் காலைக் கட்டி
முடங்கி இருக்கும் கோழை போ.

2. சுத்தமாக உடலும் உடையும்
வைத்துக் கொள்வோன் வா, வா, வா;
நித்தம் தேய்த்துக் குளித்து அழுக்கு
நீக்காப் பதரே போ, போ, போ.

3. கொடுத்த வேலை தடுத்தி டாமல்
முடிக்கும் வீரன் வா, வா, வா;
படுத்து உறங்கிச் சோம்பி ஏங்கி
பருக்கும் வீணன் போ, போ, போ.

4. ஊக்கத் தோடு முகம லர்ந்து
உழைக்கும் மைந்தன் வா, வா, வா;
ஏக்கத்தோடு சோர்ந்து வீண் நாள்
போக்கும் பேதை போ, போ, போ.

பயிற்சி



படத்தைப் பார்த்துக் கதை சொல்லுதல்.

பாடம் 28

குரங்கும் பூனைகளும்

ஒரு நாள் இரு பூனைகள் பால்கட்டிகளைத் திருடின. அவைகள் பால்கட்டிகளைத் தின்பதற்கு வேறு இடம் போயின. ஆனால், அவைகள் இரண்டும் சண்டைபோட ஆரம்பித்தன. ஒவ்வொரு பூனையும் அதிகப் பங்கு கேட்டுச் சண்டையிட்டுக் கொண்டது. "நான் தான் முதலில் பார்த்தேன். ஆகையால், என் பங்கு அதிகமா யிருக்கவேண்டும்" என்றது ஒரு பூனை. மற்றொரு பூனை, "எனக்குத்தான் அதிகப் பங்கு வேண்டும்" என்றது.

அப்பொழுது ஒரு குரங்கு அங்கே வந்தது. அது பூனைகளின் சண்டையைப் பார்த்தது. அது பூனைகளைப் பார்த்து, "என்ன சங்கதி?" என்று கேட்டது. பூனைகள் நடந்தவைகளைச் சொல்லின.

குரங்கு, தான் இலாபம் பெற நினைத்தது. பால் கட்டிகளை அது வாங்கினது; "நான் உங்களுக்குப் பிரித்துத் தருகிறேன்" என்றது. இரண்டு பூனைகளும் சம்மதித்தன. குரங்கு பால் கட்டிகளை இரண்டாய் உடைத்தது. ஆனால், ஒரு கட்டி மற்றொரு கட்டியை விடப் பெரிதா யிருந்தது. இரண்டையும் சமமாக்குவதற்குப் பெரிய துண்டைக் குரங்கு கடித்தது. ஆனால் மற்றத் துண்டு பெரியதாயிற்று. இப்படிக் குரங்கு கடித்துக் கடித்துப் பால்கட்டி

களைச் சிறிதாக்கிற்று. பூனைகள் இதைப் பார்த்தன. "ஐயா, இருக்கிற கட்டிகளை எங்களிடம் கொடுத்து விடும்" என்று கேட்டன.

குரங்கு, "இரண்டு துண்டும் சமமாயிருக்க வேண்டும்" என்றது; இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகக் கடித்துக்கொண்டே வந்தது. கடைசியில் இரு சிறு துண்டுகள் இருந்தன. "இவைகள் சிறியனவா யிருக்கின்றன. நான் உங்களுக்கு வேலை செய்ததற்கு இவைகளை எடுத்துக் கொள்கிறேன்" என்று அவைகளைக் குரங்கு விழுங்கி விட்டது. பூனைகள் கவலையோடு வீட்டுக்குப் போயின; தங்கள் முட்டாள் தனத்தினுல் பால் கட்டிகளை இழந்தன.

கேள்விகள்

1. பூனைகள் எதைத் திருடிக்கொண்டு வந்தன?
2. அவைகள் பால்கட்டிகளைத் தின்பதற்கு எங்கே சென்றன?
3. அவைகள் ஏன் சண்டை போட்டுக்கொண்டன?
4. குரங்கு எப்படி நியாயம் தீர்த்தது?
5. பூனைகள் ஏன் பால்கட்டிகளை இழந்தன?

பயிற்சி

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொற்களை எழுது:—

1. அவைகள் —— தின்பதற்கு வேறு இடம் ——
2. குரங்கு —— பெற ——
3. இரண்டையும் சமப்படுத்துவதற்கு —— துண்டைக் குரங்கு ——

பாட்டு

ஒருநாள் பூனைகளிரண்—டோரிடத்
துற்றபாற் கட்டிதனை யேதிருடிப்
பங்கிடும் வேளையிலே—ஒவ்வொன்றும்
பாதிக்குமேல் வேண்டுமெனச் சண்டையிட்டன

அங்கோர் குரங்குவந்து—சண்டைக்
காரணமென்னவென்று கேட்க
உண்மையை உரைத்துப் பூனைகள்—பங்கிட
உதவி புரியவேணும் எனக்கேட்க

சமமாய்ப் பங்கிட்டு—உமக்குத்
தருவன் எனக்குரங்கு பாற்கட்டியைக்
கூறுசெயும் போதினிலே—அதனைக்
குறைத்துக் குறைத்துக்கடித் துண்ணுவதையே


கண்டவப் பூனைகளும்—மீந்ததைக்
கருணைசெய் தேதாரும் எனவேண்ட
வீணர்களே கூலியாமது—எனவே
விழுங்கிற்று மீந்தபாற் கட்டியதனை

ஒற்றுமை யிலாமையினால்—நாமும்
உணவை யிழந்தோமென் றுரைத்துப்பின்னர்
நட்புடனே கூடியொன்றாய்—பூனைகள்
நல்லிணக்க மோடிருந்து நாளுஞ்சிறப்பாய்

வாழ்ந்தன பாலர்களே—நீங்களும்
வாழவேண்டும் ஒற்றுமையாய் வாழவேண்டுமே.

பாடம் 29

ஆற்றுப் பாலம்



இது என்ன ? இது ஒரு பாலம்.

பாலத்தின் கீழே என்ன ஓடுகிறது ?

பாலத்தின் கீழே தண்ணீர் ஓடுகிறது.

தண்ணீர் மேலே என்ன ஓடுகிறது ?

தண்ணீர் மேலே தோணி ஓடுகிறது.

ஊர் எங்கே இருக்கிறது?

பாலத்தின் அருகே இருக்கிறது.

ஆற்றின் நடுவில் என்ன பார்க்கிருய்?

ஆற்றின் நடுவில் தோணியைப் பார்க்கிறேன்.

தோணியின் மத்தியில் இருப்பவர் யார் ?

தோணியின் மத்தியில் ஒரு பெண் இருக்கிருள்.

பாலத்தின் முன்னே எத்தனை மரங்கள் நிற்கின்றன?

பாலத்தின் முன்னே பல மரங்கள் நிற்கின்றன.

ஊருக்கு வெளியே என்ன காணப்படுகின்றன?

ஊருக்கு வெளியே மலைகள் காணப்படுகின்றன.

நீ அந்த ஊருக்கு எந்த வழியாகப் போவாய்?

நான் அந்த ஊருக்குப் பாலத்தின் வழியாகப் போவேன்.

ஆற்றின் ஓரங்களில் என்ன பார்க்கிறாய்?

ஆற்றின் ஓரங்களில் புல் பூண்டுகளைப் பார்க்கிறேன்.

மரத்தின் பின்னே எத்தனை பேர் நிற்கிறார்கள்?

மரத்தின் பின்னே இரண்டுபேர் நிற்கிறார்கள்.

பயிற்சி


முன்னே, மேல், ஓரத்தில், பக்கத்தில், கீழே.

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடத்தில் தகுந்த வார்த்தைகளை எழுது :—

1. வழி—எச்சில் துப்பாதே.
2. வண்டியின்——குதிரையைப் பூட்டுவார்கள்.
3. கிணற்று——ஜாக்கிரதையாய் நில்.
4. மரத்தின்——வேடன் நிற்கிறான்.
5. யார்——நின்றாலும் துஷ்டன் பக்கத்தில் நில்லாதே.

பாடம் 30

காந்தி, ஜவஹர்லால் நேரு



இந்தப் படத்தில் வலது புறமிருப்பவர் மகாத்மா காந்தி. இவர் சத்தியசீலர்; சாந்தமூர்த்தி; உத்தம குணம் படைத்தவர். இடது புறமிருப்பவர் ஜவஹர் லால் நேரு. இவர் அறிவிற் சிறந்தவர்; ஆற்றல் மிகுந்தவர். இருவரும் தியாக புருடர்கள்; ஏழைகளுக்கு இரங்குபவர்கள். காந்தி சொற்படி நேரு நடப்பார். நமது நாடு முன்னேற்றம் அடைய வேண்டும், சுதந் திரம் அடைய வேண்டும் என இருவரும் முயற்சி செய்தார்கள்; அரசாங்கத்தோடு வாதாடினுர்கள். அதனுல் பலமுறை சிறை சென்றுர்கள்; அளவிலாத துன்பத்தை அடைந்தார்கள்; அதற்காக அவர்கள் வருந்தவில்லை.

இடைவிடாது உழைத்தார்கள்; அரும்பாடு பட்டார்கள். சத்தியம் ஜெயிக்கும். அஹிம்ஸையினலே சுதந்திரம் அடையலாம் எனக் காந்தி சொல்லிக் கொண்டே வந்தார்; அவர் கூறிய பிரகாரம் நமது நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்தார்; பின்னர் காலமானுர். இவரை நாம் மறக்க முடியுமா?

இப்பொழுது ஜவஹர்லால் நேரு நமது நாட்டில் சிறந்து விளங்குகிருர்; முதல் அமைச்சராயிருந்து அரசுபுரிகிருர்; நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைத்து வருகிருர். இவர் நீடூழி வாழ வேண்டும் என வாழ்த்துவோமாக. இவர்களுடைய வரலாறுகளை மேல் வகுப்பில் படிப்போம்.

கேள்விகள்

1. படத்தின் இடது புறத்தில் இருப்பவர் யார்?
2. படத்தின் வலது புறத்தில் இருப்பவர் யார்?
3. மஹாத்மா காந்தி எப்பேர்ப்பட்டவர்?
4. ஜவஹர்லால் நேரு எப்பேர்ப்பட்டவர்?
5. இருவரும் என்ன செய்தார்கள்?

கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொற்களை எழுது :—

இருவரும் தியாக ________. காந்தி சொற்படி ________ நடப்பார். இருவரும் ________ செய்தார்கள். பலமுறை சிறை ________. நமது நாட்டுக்குச் சுதந்திரம் ________ தந்தனர்.

விடுகதை

போவான் வருவான்
பொழுதெல்லாம் ஒருகாலில் நிற்பான் —கதவு

பட்டுக்குடைபோல் பூ பூக்கும்
பறிக்கப்போனால் எட்டாது —சந்திரன்

வேலியில்லாத் தோட்டத்திலே
விரும்பி நடாத செடியிலே
பூத்துச் சிறக்கும் மலர் —நக்ஷத்திரம்

உலகநீதி

1. ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.
2. மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
3. வஞ்சனைகள் செய்வாரோடு இணங்கவேண்டாம்.
4. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.
5. அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்.
6. மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்.
7. கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டாம்.
8. முன்கோபக் காரரோடு இணங்கவேண்டாம்.
9. மூத்தோர்சொல் வார்த்தைதனைமறக்கவேண்டாம்
10. சேராத இடந்தனிலே சேரவேண்டாம்.
11. செய்தநன்றி ஒருநாளும் மறக்கவேண்டாம்.
12. தெய்வத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.

காந்தி மஹான் வாழ்த்து

அம்பலத்தி லாடுகின்றார் பாங்கிமாரே—என்ற சந்தம்

அம்புவியி லவதரித்தார் காந்தியாரே—நல்ல
அன்புமய மானவர்நம் காந்தியாரே

நம்பினோரை யாதரித்தார் காந்தியாரே—நாளும்
நன்மொழியே கூறிவந்தார் காந்தியாரே

சத்திய நெறிதவறார் காந்தியாரே—அவர்
சாற்றிய படிநடப்பார் காந்தியாரே

உத்தம குணமுடையார் காந்தியாரே—இவர்
உலகம் புகழப்பெற்றார் காந்தியாரே

சுதந்திரம் பெற்றிடவே காந்தியாரே—நாட்டில்
துன்பமே மிகவடைந்தார் காந்தியாரே

தன்னலம் கருதாதவர் காந்தியாரே—நமக்குத்
தண்ணளி மிகப்புரிந்தார் காந்தியாரே

எல்லோரும் ஒன்றுஎன்றார் காந்தியாரே—நாம்
இதமுறும் வாழ்வளித்தார் காந்தியாரே

சுதந்திரம் வாங்கித்தந்தார் காந்தியாரே—நம்மைச்
சுகமாக வாழவைத்தார் காந்தியாரே

இதம்பெற வேதுதிப்போம் காந்தியாரே—நாங்கள்
எந்தநாளும் மறவாமல் காந்தியாரே